# அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை – 06.

## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் – 2024

## தமிழ் – விடைக்குறிப்புகள்

விடைத்தாள் மதிப்பிடும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்ற வேண்டும்.

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்ப்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளைக் (x) குறியிட்டும், தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே
   ✓ குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடை இருப்பின் "மிகை" என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் "மீண்டும்" என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்குதல் கூடாது.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com


பகுதி –I

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண் |
|---|---|---|
| | அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. | 14x1 =14 |
| 1 | (அ) அடி எதுகை, சீர் மோனை | 1 |
| 2 | (ஈ) (1) – (iii), (2) – (iv), (3) – (ii), (4) – (i) | 1 |
| 3 | (ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார் | 1 |
| 4 | (அ) நாய் | 1 |
| 5 | (அ) கடுக்காய் | 1 |
| 6 | (ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும் | 1 |
| 7 | (ஆ) (1) – (iv), (2) – (iii), (3) – (ii), (4) – (i) | 1 |
| 8 | (இ) (1) சரி; (2) சரி | 1 |
| 9 | (ஈ) சொல்வது – சொல்லியபடி செய்வது | 1 |
| 10 | (அ) வளர்ந்த | 1 |
| 11 | (இ) கிறித்தவமும் தமிழும் | 1 |
| 12 | (ஆ) குறியீடு | 1 |
| 13 | (அ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது | 1 |
| 14 | (இ) சாய்வு நாற்காலி | 1 |

பகுதி –II

| | | |
|---|---|---|
| | (பிரிவு – 1) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. | 3x2=6 |
| 15 | ஞாலத்தின் பெரியது:<br>• உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி<br>• அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகின் அளவைவிட மிகப்பெரியதாகும். | 1<br>1 |
| 16 | நெடுநல்வாடை – பெயர்க்காரணம்:<br>• தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுதியால் வாடைக்காற்று நெடுவாடையாகவும்<br>• போர்ப்பாசறையில் இருக்கும் தலைவனுக்குப் போரில் வெற்றிபெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது. | 1<br>1 |
| 17 | வசனம் – கவிதை<br>• வசனம் – சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்க்கும் போது எதுகை, மோனை இல்லாமல், அடி அளவை அறிந்திடாமல் எழுதுகின்ற வடிவம்.<br>• கவிதை – எதுகை, மோனை பொருந்த யாப்பிலக்கணத்திற்குள் வார்த்தைகள் அடங்கி அமைவது. | 1<br>1 |
| 18 | முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம்<br>• தனக்குள்ளே தன் முகம் தொலைந்துபோன காரணத்தால் முகம் முகவரியற்றுப் போனது என்று சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார். | 2 |
| | (பிரிவு – 2) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. | 2x2 =4 |
| 19 | புக்கில், தன்மனை:<br>• புக்கில் – தற்காலிகத் தங்குமிடம்.<br>• தன்மனை – திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் தனித்து வாழுமிடம். | 1<br>1 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 20 | முறைவைப்பு:<br>• ஆசிரியர் ஒன்றைச் சொல்ல மாணவர்கள் பலரும் சேர்ந்து அதனைப் பின்பற்றிச் சொல்வது முறைவைப்பாகும். | 2 |
| 21 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்:<br>• காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869–இல் உருவாக்கப்பட்டது.<br>• அரிய ஓலைச் சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது. | 1<br><br>1 |
| | (பிரிவு – 3) எவையேனும் ஏழனுக்கு விடை தருக. | 7x2 =14 |
| 22 | தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்<br>• குறில் நெடில் வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.<br>• எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவம், அவை சொல்லில் வரும் இடங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.<br>• நகர, னகர, ணகர வேறுபாட்டை அறிந்துகொள்ள வேண்டும். ரகர, றகர வேறுபாடு லகர, ளகர, ழகர வேறுபாடு இவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும்.<br>• வல்லினம் மிகும் இடம், மிகா இடம் இவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதனால் சந்திப்பிழையைத் தவிர்க்கலாம்.<br>• வரியின் தொடக்கத்தில் ஒற்றெழுத்துக் கண்டிப்பாக வராது. இவை எழுத்துப் பிழைகளையும், சொற்பிழைகளையும் தவிர்க்கும் வழிமுறைகளாம்.<br>(ஏற்புடைய இரண்டு கருத்துகள் எழுதியிருப்பினும் முழுமதிப்பெண் வழங்கலாம்) | 1<br><br>1 |
| 23 | வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.<br>• மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். | 2 |
| 24 | தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.<br>அரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார். | 2 |
| 25 | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.<br>நிலத்தைக் கிளற / உழ வேண்டும். அப்பொழுதுதான் வயிறு நிறையும். | 2 |
| 26 | பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.<br>• தின்மை – தீமை<br>• திண்மை – வலிமை, உறுதி<br>• பிறர் செய்யும் தின்மையைப் பொறுப்பதே மிகச் சிறந்த திண்மையாகும்.<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 27 | பகுபத உறுப்பிலக்கணம். (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)<br>(அ) செய்த – செய் + த் + அ<br>செய் – பகுதி<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி<br><br>(ஆ) கலங்கி – கலங்கு + இ<br>கலங்கு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | 1<br><br>1 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 28 | கலைச்சொல்லாக்கம்.<br>(அ) Stapler – கம்பி தைப்புக் கருவி<br>(ஆ) Teller– விரைவுக் காசாளர்<br>குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.<br>• தந்தையை இழந்த குடும்பம் அச்சாணி இல்லாத தேர்போல ஆயிற்று.<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 29 | புணர்ச்சி விதி. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)<br>(அ) உரனுடை – உரன் + உடை<br>விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.<br><br>(ஆ) தலைக்கோல் – தலை + கோல்<br>விதி: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். | 1<br>1 |
| 30 | சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.<br>(அ) கோவில்<br>• கோவில் திருவிழாவிற்குச் சென்றோம்.<br>• கோ வில்லால் மானை வீழ்த்தினார்.<br>(ஆ) தாமரை<br>• குளத்தில் தாமரை பூத்துள்ளது.<br>• தா மரையைப் பிடிக்க முடியாது.<br>(ஏதேனும் ஒன்றனுக்குப் பொருத்தமான இரண்டு தொடர்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br>1 |
| | பகுதி –III | |
| | (பிரிவு – 1) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. | 2x4 =8 |
| 31 | “ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்”<br>இடம் – ‘ஓங்கலிடை’ எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.<br>பொருள் – சூரியனும் தமிழும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள இருளைப் போக்கும் தன்மை வாய்ந்தன.<br>விளக்கம் – சூரியன், தன் கதிர்களால் உலகில் உள்ள புற இருளைப் போக்கும். தமிழ், மக்களின் அக இருளைப் போக்கி அறியாமையை அகற்றும் சிறப்புடையது. | 1<br><br>1<br>2 |
| 32 | சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகள் :<br>• ‘எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை’ என்று கண்டவர் வியக்கும்படியான அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான்.<br>• தேவையான அளவு தருப்பைப் புற்களை ஒழுங்குபட அடுக்கினான்.<br>• பூக்களைக் கொண்டு வந்து தூவினான்.<br>• மணலினால் மேடை அமைத்தான்.<br>• தெளிந்த நன்னீரைக் கொண்டு வந்தான்.<br>• தன் தந்தையாக ஏற்றுச் சடாயுவின் உடலைத் தம் பெரிய கைகளால் தூக்கிச் சென்று அடுக்கப்பட்ட விறகுகள் மீது வைத்து, இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தான். | 4 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 33 | நாட்டிய அரங்கின் அமைப்பு:<br>• சிற்ப நூலில் சொல்லப்பட்டவாறு சிறந்த நன்னிலத்தை ஆடல் அரங்கிற்குத் தேர்ந்தெடுத்தனர்.<br>• மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே ஒன்றுக்கொன்று இடையே ஒருசாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கிலைக் கொண்டு வந்தனர்.<br>• தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர்.<br>• அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் ஏழுகோல் அகலமும், எட்டுகோல் நீளமும், ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.<br>• தூண்களின் நிழலானது அவையிலும், நாட்டிய அரங்கிலும் விழாதபடி நல்ல அழகான நிலைவிளக்குகளை நிறுத்தினர்.<br>• இரண்டு வாயில்கள் மற்றும் ஒருமுகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல்திரை என மூன்று திரைகளையும் சிறப்புடன் அமைத்தனர்.<br>• சிறந்த முத்துகளால் ஆன மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர்.<br>(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| 34 | கடையெழு வள்ளல்கள் மற்றும் அவர்கள் செய்த செயல்கள்:<br>• பேகன் – மயிலுக்குப் போர்வையைத் தந்தவன்.<br>• பாரி – முல்லைக் கொடிக்கு தேரினைத் தந்தவன்.<br>• காரி – இரவலர்களுக்குக் குதிரைகளைத் தந்தவன்<br>• ஆய் – இறைவனுக்கு நீலவண்ணக் கல்லையும், நாகம் தந்த ஆடையினையும் தந்தவன்.<br>• அதியன் – ஔவைக்கு அரிய நெல்லிக்கனியைத் தந்தவன்.<br>• நள்ளி–நண்பர்களின் மனக்குறிப்பறிந்து பொருட்செல்வங்களைத் தந்தவன்.<br>• ஓரி – மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாகத் தந்தவன். | 4 |
| | (பிரிவு – 2) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. | 2x4 =8 |
| 35 | பேரிடர் மேலாண்மை ஆணையம் :<br>• நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.<br>• புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதிவிபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.<br>• மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துச் செயல்பட இவ்வாணையம் வழிவகைச் செய்கிறது. | 4 |
| 36 | மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் :<br>மணலில் எழுதுதல்<br>• பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.<br>• உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் விளம்புவார்கள் (எழுதுவார்கள்). பிறகு தாமே எழுதிப் பழகுவார்கள். | 4 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | கையெழுத்து<br>• எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரி கோணாமல் எழுதினார்கள்.<br>எழுத்தின் அளவு<br>• இப்போது அச்சுப் புத்தகங்களின் அளவில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு வேறுபாடுகள் பனையோலைச் சுவடிகளிலும் உண்டு.<br>ஏடெழுதும் வழக்கம்<br>• ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துகளாக இருபது முதல் முப்பது வரிகள் வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன.<br>• நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடு ஏட்டில் எழுதுவதுண்டு.<br>எழுத்தின் வடிவம்<br>• புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புகள்.<br>• எழுத்துகளின் உருவங்களில் பல காலமாக மாற்றம் இல்லை. எழுதும் வழக்கத்திலும் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை.<br>(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |
| 37 | சென்னையின் பண்பாட்டு அடையாளங்கள்:<br>• இந்திய சாரசனிக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்ட மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்ற பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவையாக உள்ளன.<br>• மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபிஸ், எழும்பூர் அருங்காட்சியகம், புனித ஜார்ஜ் கோட்டை, அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம், திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்க அடையாளங்களாகும். | 4 |
| 38 | வேளாண் மேலாண்மை<br>• வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.<br>• சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,<br>• உரிய நேரத்தில் விதைத்தல்,<br>• நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,<br>• அறுவடைக்குப் பின் பாதுகாத்தல்,<br>• உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல்<br>• என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் நிருவாகநெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும். | 4 |
| | (பிரிவு – 3) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. | 3x4 =12 |
| 39 | அணி விளக்கம் : 2 மதிப்பெண்<br>அணி சுட்டல் /சான்று : 1 மதிப்பெண்<br>பொருத்தம் : 1 மதிப்பெண்<br>அ) ஏகதேச உருவக அணி<br>அணி சுட்டல்<br>இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி ஏகதேச உருவக அணி. | 4 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | அணி விளக்கம்<br>ஒரு செய்யுளில், ஒரு பொருளை உருவகம் செய்து, அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.<br><br>பொருத்தம் – சினத்தை நெருப்பாகவும் இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார்.<br><br>(அல்லது)<br>ஆ) உவமை அணி<br>அணி விளக்கம்<br>ஒரு செய்யுளில், உவமை ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து, உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி எனப்படும்.<br>சான்று<br>உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்<br>பாம்போடு உடனுறைந் தற்று.<br>பொருத்தம்<br>உவமை – குடங்கருள் பாம்போடு உடனுறைதல்<br>உவமேயம் – உடம்பாடு இலாதவர் வாழ்க்கை<br>உவம உருபு – அற்று<br>(ஏற்புடைய வேறு குறள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.) | |
| 40 | இலக்கிய நயம் பாராட்டல்<br>• மையக்கருத்து – பாண்டியர் முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த சிறப்புக் கூறப்பட்டுள்ளது.<br>• நயங்கள் –மோனை, எதுகை, இயைபு, முரண், அணி, சுவை, சொல், சந்தம்<br>(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| 41 | திணை / துறைவிளக்கம் : 2 மதிப்பெண்<br>சான்று : 1 மதிப்பெண்<br>பொருத்தம் : 1 மதிப்பெண்<br><br>(அ)வாகைத்திணை<br>திணை விளக்கம்<br>• வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.<br>சான்று<br>• “வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ” – எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல்.<br>பொருத்தம்<br>• போர்ப் பாசறையிலிருக்கும் பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாக இருப்பதால், வாகைத் திணை இப்பாடலுக்குப் பொருந்தும்.<br><br>(அல்லது) | 4 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | (ஆ) செவியறிவுறூஉ துறை<br>துறை விளக்கம்<br>• அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.<br>சான்று<br>• "காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;" – எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.<br>பொருத்தம்<br>அரசனிடம் பிசிராந்தையார், வரி திரட்டும் முறையறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் என்று அறிவுறுத்துவதால் இது இத்துறைக்குப் பொருந்தும். | |
| 42 | பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுதல்<br>(அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை<br>பிறருடைய செயல்களைக் குறைகூறிக்கொண்டே இருந்தால் நம்மோடு யாரும் இருக்க மாட்டார்கள்.<br>(ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்<br>உயர்ந்த குணமுடையோர் ஒருபோதும் தம் கொள்கையை மாற்றிக் கொள்ள மாட்டார்.<br>• பழமொழி விளக்கம்<br>• வாழ்க்கை நிகழ்வு (கதை)<br>(பொருத்தமான வாழ்க்கை நிகழ்வினை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| 43 | தமிழாக்கம் தருக.<br>(1) மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அவர்கள் மொழியில் பேசு.<br>(2) ஒரு புதுமொழி ஒரு புது வாழ்க்கையாகும்.<br>(3) எனது மொழியின் எல்லையே, எனது உலகத்தின் எல்லை.<br>(4) மொழிகளின் அறிவு ஞானத்தின் திறவுகோல்.<br>(தொடர்புடைய தமிழாக்கம் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)<br>செவி மாற்றுத்திறனாளிகளுக்கான மாற்று வினா.<br>(1) வை.மு. கோதைநாயகி.<br>(2) கோதைநாயகியின் கணவர்.<br>(3) இந்திர மோகனா.<br>(4) வை.மு. கோதைநாயகி தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். | 4 |
| | பகுதி –IV<br>அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. | 3x6 =18 |
| 44 | (அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலைகள்:<br>வேடுவர் தலைவன் குகனுடன் கொண்ட உறவு:<br>• காட்டிற்குச் செல்லும் இராமனுக்கு கங்கையைக் கடக்க உதவுகிறான்.<br>• அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில் இராமன் குகன் நட்பு முகிழ்கிறது. | 6 |

- இராமன் இளவரசனாக இருப்பினும் வேடனான குகனை உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான்.

கழுகு வேந்தன் சடாயுவுடன் கொண்ட உறவு:

- இராவணன் சீதையைச் சிறைபெடுத்தபோது, கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்பட்டு இறந்துவிடுகிறான்.
- தன் தந்தையின் நண்பனாகிய கழுகு வேந்தனைத் தன் தந்தையாகவே கருதி, ஒரு மகனாக இருந்து இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

எளிய முதியவள் சவரியுடன் கொண்ட உறவு:

- சீதையைத் தேடி வரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்பு கொள்ளுமாறு செய்தவள் சவரி.
- இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

வானரத் தலைவன் சுக்ரீவனுடன் கொண்ட உறவு:

- சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான்.
- ஆசையை அறவே அழித்த சிந்தையான் இராமனும், வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கும் சந்திரனையும் சூரியனையும் ஒத்திருந்தார்கள்.
- இராமன் சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான்.

எதிரியின் தம்பி வீடணனுடன் கொண்ட உறவு:

- சீதையைக் கவர்ந்து வந்தது தவறென இராவணனிடம் கூறி, இலங்கையை விட்டு வந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான்.
- இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான்.

(அல்லது)

(ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும்.

- அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.
- மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.
- எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.
- உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.
- பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமை கொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 45 | அ) பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்கள் இடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகள்<br>குருகுலம்<br>• நம் நாட்டில் மிகப்பழங்காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பர். கணக்காயரென்பது உபாத்தியாயருக்குப் பெயர்.<br>மன்றங்கள்<br>• ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியில் மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும் அதை மன்றமென்றும் அம்பலமென்றும் கூறுவர். அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது.<br>பள்ளிகள்<br>• மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களில் பாடசாலைகள் உண்டாயின.<br>• பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும் பாட சாலைகளுக்கும் பொதுவான பெயர். பாடசாலைகள் வேறு, மடங்கள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டதால் பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கப்பட்டது.<br>வித்யாரம்பம் அல்லது கல்வித் தொடக்கம்<br>• பண்டைக் காலத்தில் பிள்ளைகளின் ஐந்தாம் வயதில் வித்யாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் அவர்களை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள். பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப்படும். ஏட்டின்மீது மஞ்சள் பூசிப் பூசித்து பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள்.<br>முறைவைப்பு<br>• உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறைவைப்பு' என்று கூறுவர்.<br>மையாடல் விழா<br>• சுவடிகளில் உள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காக சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு அல்லது ஊமத்த இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைத் தடவுவார்கள்.<br>• இங்ஙனம் மைதடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதை 'மையாடல் விழா' என்று கூறுவர்.<br>எழுத்துப் பயிற்சி<br>• பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள்.<br>• எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல், வரிகள் கோணாமல் பழங்காலத்தில் எழுதி வந்தனர்.<br>மனனப் பயிற்சி<br>• அக்காலத்துப் பாடமுறையில் அடிப்படையான நூல்கள் மனனப் | 6 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | பயிற்சிக்கு உதவின. தமிழில் நன்னூல், நிகண்டு, காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருக்கும்.<br>• கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய வாய்பாடுகள் பாடமாக இருக்கும்.<br>எழுத்தாணிகள்<br>• ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியை ஊசி என்றனர். மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி ஆகியவை எழுத்தாணிகளின் வகைகள் ஆகும்.<br>அன்பினால் அடக்குதல்<br>• ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தனர். அவர்களிடம் இருந்த மரியாதை மாணவர்களுக்குப் பயத்தையும் பக்தியையும் உண்டாக்கியது.<br>வாதம் புரிதல்<br>• மிகச்சிறந்த நூல் பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதம் புரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என மதுரைக்காஞ்சி எடுத்துக் கூறுகிறது.<br>சாந்துணையும் கற்றல்<br>• பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டார் பயின்று வந்தனர் "என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு!" எனத் திருக்குறள் கூறுகிறது. எங்கெங்கு ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே மாணவர்கள் சென்று கற்று வந்தனர்.<br>ஓதற்பிரிவு<br>• இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கு உள்ளோர்க்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும், வாதம் புரிந்து வென்றும், தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர். தொல்காப்பியம் ஓதற்பிரிவுக்கான கால எல்லை மூன்று ஆண்டுகள் எனக் கூறுகிறது.<br>(எவையேனும் ஆறு தலைப்புகள் இருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)<br>(அல்லது)<br>(ஆ) ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு:<br>• மாணவர் விரும்பும் நகரத்தின் பெயர்<br>• அந்நகருக்குரிய வரலாற்றுச் சிறப்புகள்<br>• புகழ்பெற்ற வழிபாட்டுத் தலங்கள், திருவிழாக்கள்<br>• இயற்கையமைப்பு மற்றும் சுற்றுலாத் தலங்கள்<br>• தொழில் மற்றும் வேலைவாய்ப்புகள்<br>(முன்னுரை, முடிவுரையுடன் ஏற்புடைய கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |
| 46 | (அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலன்கள்:<br>பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகள்:<br>• வளவனாறு – வெள்ளப்பெருக்கு – பயிர்கள் நீரில் மூழ்கும் நிலை – மருதன் பார்த்தல் | 6 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | மருதனின் பொறுப்புணர்வு:<br>• பயிர்களைக் கண்டு மனம் வருந்துதல் – ஆயிரம் யோசனைகள் – மண்டிக் கிடந்த காட்டாமணக்குச் செடிகள் – உபரி நீர் வடிய வழி கண்ட மகிழ்ச்சி<br>மருதனின் சமூக அக்கறை:<br>• மீன்பிடி மாரிமுத்து, பாட்டி முல்லையம்மாள், ஊர் மிராசு காளியப்பன், முதல் பட்டதாரி பிரேம்குமார், ஊர்க்காரர்கள் ஒருவர் விடாமல் அனைவரிடமும் சொல்லிப் புலம்புதல் – ஒருவரும் முன்வராததால் சோர்வுடன் வீடு திரும்புதல் – தன்னிலை மறந்திருத்தல்<br>மருதனின் தன்னம்பிக்கை:<br>• தன்னால் முடிந்தவரை முயற்சி செய்வோம் எனத் துணிதல் – மனைவி அல்லியின் உதவி<br>• மறுத்தவர் அனைவரும் ஒன்றுசேர்ந்து / மனந்திருந்தி மருதனோடு இணைந்தனர்.<br>• மருதனின் விடாமுயற்சியினால் பயிர்கள் மூழ்காமால் காப்பாற்றப்பட்டன. கிராமத்தின் வீடுகளும் நீரில் மூழ்காமால் காப்பாற்றப்பட்டன.<br>(கதையின் சுவை குன்றாமல் சொந்த நடையில் விளக்கமாக எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)<br><br>(அல்லது)<br><br>ஆ) சாலை விபத்தில்லா தமிழ்நாடு – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன.<br><br>வாழ்வை முழுமையாக்குவது பயணம் – சாலை விதிகளை அறிவதும் ஒருவகைக் கல்வியே – சாலைப் போக்குவரத்தில் இரண்டாவது பெரிய நாடு – மாணவர்கள் விபத்தைத் தடுக்கும் விழிப்புணர்வு பெறுதல் – பெரும் கேடும், இழப்பை உணர்தலும் – சாலை விபத்தில்லா தமிழகம்.<br>(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |
| | பகுதி –V | |
| | அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. | 4+2 = 6 |
| 47 | அ) புறநானூறு<br>அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,<br>வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்<br>காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;<br>மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்<br>மழுவுடைக் காட்டகத்து அற்றே<br>எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.<br>– ஔவையார் | 4 |
| | ஆ) திருக்குறள்<br>அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை<br>வேண்டும் பிறன்கைப் பொருள். | 2 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com